www.Padasalai.Net www.TrbTnpsc.com

கவிதைப்பேழை

இயல் 6

# சீறாப்புராணம்

297CRD




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்று இலக்கியம் சீறாப்புராணம். இது தமிழ் இலக்கிய மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட தலைசிறந்த இசுலாமிய இலக்கியமாகும். பகையும் வறுமையும் நோயும் தீண்டாப் பொருள்வளம் நிறைந்த மதீனா நகரில் தானத்திலும் தவத்திலும் சிறந்து விளங்கிய மக்கள் தீன் நெறியை வளர்த்த பாங்கினைச் செலவியற் காண்டம் (ஹிஜிறத்துக் காண்டம்) காட்சிப்படுத்துகிறது.

## ஹிஜிறத்துக் காண்டம் – மதீனம் புக்க படலம்

ஹிஜிறத் என்ற அரபுச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள். மக்கா நகரத்தின் குறைசி இன மக்கள், நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்தனர். நபிகள் நாயகம் மக்காவைவிட்டு, மதீனாவிற்கு வரவேண்டுமென்று மதீனா மக்கள் அழைத்தனர். அந்த அழைப்பை நபிகள் நாயகம் ஏற்றார். இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவைவிட்டு மதீனா நகரத்திற்குத் தம் துணைவரான அபூபக்கர் முதலானோருடன், முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் கடந்து மதீனா நகரத்தில் நுழைந்தார். அந்நகரினைக் காப்பிய இலக்கண நெறி நின்று உமறுப்புலவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

### மாளிகை நகரம்

வடவரை பொருவென மலிந்த மேனிலைக்
கடலென ஒலித்தது ஆவணத்தின் கம்பலைப்
புடவியை அளந்தன போன்று வீதிகள்
இடனற நெருங்கின மாடம் எங்குமே

### மனைநகரம்

சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலால்
புதுமலர்த் தெருத்தொறும் சிந்திப் பொங்கலால்
எதிர்பணிந்(து) இடுவிருந்து இனிதின் நல்கலால்
வதுவையின் மனையென இருந்த மாநகர்

### கொடை நகரம்

கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணிய(து)
இலையெனா(து) அரும்பொருள் யாவும் எய்தலால்
மலைவிலா(து) அருளிய வள்ளி யோரினும்
தொலைவிலாப் பெரும்புகழ் படைத்த தொன்னகர்

### மாநகரம்

உறுபகை வறுமைநோய் ஓட ஓட்டிமேல்
குறைவற மனுமுறைக் கோன்(ந) டாத்திநீள்
நிறைதரு பெரும்புகழ் நிலைநி றுத்தியோர்
மறுவிலாத அரசென இருந்த மாநகர்

### பொன்னகரம்

தோரணத் தொடும் கொடிக்காடு துன்னலால்
வாரண மதமல மலிந்து நிற்றலால்
காரணத் தொடும்வர வாறு காணலால்
பூரணப் புவியெனப் பொலிந்த பொன்னகர்

### ஒண்ணகரம்

தெண்டிரை ஆரமும் பூணுஞ் சிந்தலால்
விண்டுபற் பலபல மொழிவி ளம்பலால்
மண்டிய வளந்தலை மயங்க லால்மது
உண்டவர் எனமதர்த்(து) இருந்த ஒண்ணகர்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடுபோல நெருங்கியிருந்தன. மலைபோன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன; வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன; இவற்றால் முழுமை பெற்ற பூமியைப்போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது.

### செம்மை நகரம்

தான்மும் ஒழுக்கமும் தவமும் ஈகையும்
மானமும் பூத்ததிண் மறனும் வெற்றியும்
ஊனமில் ஊக்கமும் ஒளிர்க் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்.

**– உமறுப்புலவர்**

மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக்கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன. வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன. ஒவ்வொருவரையும் அழைத்துக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது. இதனால் அந்நகர் திருமண வீட்டைப்போன்று பொலிவுடன் காட்சியளித்தது.

### சொல்லும் பொருளும்

வரை – மலை; கம்பலை – பேரொலி; புடவி – உலகம்; எய்துதல் – பெறுதல்; வாரணம் – யானை; பூரணம் – நிறைவு; நல்கல் – அளித்தல்; வதுவை – திருமணம்; கோன் – அரசன்; மறுவிலா – குற்றம் இல்லாத; துன்ன – நெருங்கிய; பொறிகள் – ஐம்புலன்; தெண்டிரை – தெள்ளிய நீரலை; விண்டு – திறந்து; மண்டிய – நிறைந்த; காய்ந்த – சிறந்த; தீன் – மார்க்கம்.

பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன. மேலும், குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசைப்போலப் பொலிவுடன் இருந்தது மதீனா நகரம்.

www.Padasalai.Net

### பாடலின் பொருள்

மேருமலையினைப்போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன. அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலிபோன்று இருந்தது. மதீனா நகரின் வீதிகள் பிரபஞ்சத்தைப்போன்று பரந்திருந்தன. அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதறுவதுபோல மதீனா நகரில் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். தேன் அருந்தியவர்கள் மயங்குவதுபோலப் பலவாறான பொருள் வளத்தால் ஒளி பெற்றுத் திகழ்கிறது மதீனா நகரம்.

பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை. அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு. அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம்.

மதீனா நகரில் தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன. திண்ணிய வலிமை நல்கும் வெற்றி. அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன. தீன் எனும் செல்வம் பழுத்திருந்த செம்மை பொருந்திய நகராக மதீனா இருந்தது.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

 www.Padasalai.Net

www.TrbTnpsc.com எம். ஏ. ஜெலஸ்டின்

## மாளிகை நகரம்

மதுரை நகரமெங்கும் / நிறைந்த / மாளிகையின் மேல்மாடங்கள் / வடக்கிலுள்ள இமயமலைக்கு (பெரு மலை) ஒப்பு எனக் கூறத்தக்க அளவிற்கு உயர்ந்து விளங்கின ;/ கடைவீதியில் மக்களிடமிருந்து எழுந்த ஆரவாரம் / கடலோசை என எழுந்தது / தெருக்கள் / பூமியை அளப்பன போல மிக நீளமாய் இருக்கின்றன,/ இனி கட்டுவதற்கு இடம் சிறிதுகூட இல்லை என்று சொல்லத்தக்க வகையில் / நெருக்கமாய் மாடங்களைக் கொண்ட கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தன /

## கொடை நகரம்

கலைகளில் வல்லமை பெற்ற கலைஞர்கள் / வேதங்களை ஓதுபவர் / தம் உள்ளத்து ஆசையில் வேண்டும் என விரும்பிய ஒன்று / அது கிடைக்காது என்று சொல்லாத வகையில் / அரிய பொருள்கள் எல்லாவற்றையும் / பெற இயலுவதால் / மாறுபாடில்லாத / வாரி வழங்கிய / வள்ளல்களைக் காட்டிலும் / குறைவு இல்லாதவாறு / மிகுந்த புகழினைப் பெற்றவர்கள் / மிக பழமையான நகர் மதுரை ஆகும் /

## பொன்னகரம்

பொன் போன்று ஒளிரும் மதுரை நகரின் / தெருக்களில் / பல வண்ணத் தோரணங்களும் கொடிகளும் / மிகுதியாய் நெருக்கமாய்க் கட்டப்பட்டிருந்ததால் / மலை போன்ற உருவம் கொண்ட மதநீர் ஒழுகும் யானைகள் நிறைந்து இருந்ததால் / மக்கள் பல [illegible] நோக்கங்களோடு தெருவில் வருவதைக் காண நேர்ந்ததால் / முழு உலகமும் இதுதானோ எனக் ~~[illegible]~~ கருதத்தக்கவாறு / மதுரை நகர் அழகு பெற்று விளங்கிற்று. /

## மனை நகரம்

பல மாடங்களைக் கொண்ட மதுரை நகரத்து மாளிகைகளின் / சுவர்களில் பூசப்பட்ட சுண்ணாம்பின் மீது / சூரிய ஒளிபட்டு / மிகுதியாய்த் தோற்றமளிப்பதால் / புத்தம் புதிய மலர்கள் / ஒவ்வொரு வீதியிலும் / சிதறிப் பொலிவுடன் காணப்படுவதால் / தம் இல்லம் நோக்கி வரும் விருந்தினரைப் பணிவுடன் நன்மொழி கூறி அழைத்து வந்து / அளிக்கின்ற உணவினை / இன்முகத்தோடு அளிப்பதால் / திருமணம் நிகழும் வீட்டைப்போல / பெருமை மிக்க மதுரை நகர் இருந்தது.

## மாநகரம்

மிகுந்த பகை / இல்லாமையாகிய துன்பம் / பிணி ஆகியவற்றை / நாட்டைவிட்டு நீங்கி ஓடுமாறு செய்து /, மேலும் / எந்தக் குறையும் கூற இயலாத அளவு / மனு தரும சாத்திர நெறியினின்று சற்றும் பிறழாது / நடுநிலையோடு ஆட்சி புரிந்து / மக்களுக்கு மிகுந்த மன நிறைவைத் தரும் வகையில் ஆண்டு / அதனால் இவ்வுலகில் மிகுந்த புகழினை / நிலை பெறுமாறு செய்து / ஒப்பற்ற / களங்கம் இல்லாத / அரசு என்று சான்றோர்களால் புகழத்தக்க அரசு என / இருந்தது மதுரை மாநகர்

## வண்ணகரம்

தெளிந்த அலைநீரை கொண்ட கடலிலிருந்து தோன்றிய முத்துகளைக் கொண்ட / முத்துமாலையும் / மக்கள் அணியும் பிற ஆபரணங்களும் / தெருக்களில் விற்பனைக்காக சிதறிக் கிடப்பதால் / வாய் திறந்து / பல்வேறு ஒலி எழுமாறு / மக்கள் பல்வேறு மொழிகளை / பேசுவதனால் / நிறைந்த விளைபொருள்கள் / ஒன்றோடொன்று கலந்து கிடந்ததனால் / மதுவை அருந்தியவர் போல / நிலைபுரண்டு காணப்பட்டது / அழகிய மதுரை நகர்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

Scanned by CamScanner

## இலக்கணக் குறிப்பு

### 1. மாளிகை நகரம்

வடவரை - ஐந்தன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை
அளந்தன - படர்க்கை அஃறிணை வினைமுற்று
மலிந்த வேணில் - பெயரெச்சம்

### 2. சொல்லை நகரம்

அரும்பொருள், பெரும்புகழ், தொன்நகர் - பண்புத்தொகை
கலைவலார் (கலையில் வல்லவர்) - ஐந்தாம் வேற்றுமைத் தொகை
மலைவலாது, தொலைவலாது - தொகுத்தல் விகாரம்
(மலை வல்லாது, தொலை வல்லாது)

### 3. பொன்னகரம்

பொன்நகர், தேவாரணம் - இரண்டன் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
மலிந்து - வினையெச்சம்
பொலிந்த - பெயரெச்சம்.

### 4. மணிநகரம்

சிதைவெளி - ஆறாம் வேற்றுமைத் தொகை
சிந்தி - வினையெச்சம்
மாநகர் - உரிச்சொற்றொடர்

### 5. மாநகரம்

பகை வறுமை நோய் - உம்மைத்தொகை
ஓட்டி - வினையெச்சம்
பெரும்புகழ் - பண்புத்தொகை
நிறுத்தியோர் - வினையாலணையும் பெயர்.

## பகுபத உறுப்பிலக்கணம்

### மாளிகை நகரம்

மலிந்த - மலி + த் (ந்) + த் + அ
மலி - பகுதி
த் - சந்தி, த் (ந்) ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

நெருங்கின - நெருங்கு + (இ)ன் + அ
நெருங்கு - பகுதி
(இ)ன் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. வடவரை - வடக்கு + வரை
"திசையொடு திசையும் பிறவும் சேரின் நிலையீற்றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்" என்ற விதிப்படி, நிலையீற்று உயிர்மெய் (கு) ககர ஒற்று (க்) கெட்டு வடவரை என்றானது.
2. அரும்பொருள் - அருமை + பொருள்
ஈறுபோதல் > அரு + பொருள்
இனமிகல் > அரும்பொருள்
3. மணியென - மணி + என
இ ஈ ஐ வழி யவ்வும் > மணிய் + என
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
4. தெண்டிரை - தெண்மை + திரை
ஈறுபோதல் > தெண் + திரை
'ணளமுன் டணவும் ஆகும் தநக்கள்'
த் > ட ஆக மாறி தெண்டிரை

## இலக்கணக் குறிப்பு

### 6. வெண்ணகரம்

அறமும் புகழும் - எண்ணும்மை
உண்டவர் - வினையாலணையும் பெயர்.
அதுவண்டவர் - இரண்டாம் வேற்றுமைத் தொகை.
மண்டிய - பெயரெச்சம்

### 7. செம்மை நகரம்

காய்ந்த, பழுத்த, சூழ்ந்த - பெயரெச்சம்
மறன் (மறம்) - ஈற்றுப் போலி.

### 7 ஆம் பாடல் விளக்கம்

அறவோர்க்கு அளித்தலும் நன்னடத்தையும், பற்றற்ற நிலையும், இல்லார்க்கு ஈதலும், தன் நிலையினின்று சிறக்கும் தாளாண்மையும், தோன்றிய திண்ணிய வீரமும் வெல்லும் திறனும் இறைவனை மனம் எண்ணியும், ஒளி வீசும்படி தோன்றிய நல்ல இசைவாம் (?) சான்றோர்க்கும் என்றும் செல்வம் பகிர்வைப்ப சொர்க்கமே மதுரை நகரமே.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

தமிழமுது

www.Padasalai.Net
www.TrbTnpsc.com

## சிறுவினா

1. சீறாப்புராணம் என்னும் தொடரின் பொருள் யாது?

சீறா + புராணம். சீறத் என்னும் அரபு மொழிச்சொல் 'சீறா' எனத் திரிந்தது. 'சீறத்' என்பதற்கு வரலாறு என்பது பொருள். புராணம் – பழமையான வரலாறு. நபிநாயகத்தின் புகழ்மிக்க வரலாற்றைக் கூறும் புராணம் என்பதாகும்.

2. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?

சீறாப்புராணம் 3 காண்டங்களை உடையது. அவை, விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்றத்துக் காண்டம் ஆகும்.

3. சீறாப்புராணம் தொடங்கவும் முற்றுப்பெறவும் துணைநின்ற வள்ளல் பெருமக்கள் யாவர்?

சீறாப்புராணம் தொடங்க உமறுப்புலவருக்கு உதவியவர் வள்ளல் சீதக்காதி ஆவார். சீதக்காதி மறைந்த பின் நூல் முற்றுப் பெறத் துணை நின்ற வள்ளல் அபுல் காசிம் மரைக்காயர் ஆவார்.

4. உமறுப்புலவர் – ஆசிரியர் குறிப்பு வரைக

உமறுப்புலவர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள நாகலாபுரத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் செய்கு முகம்மது அலி ஆகும். கடிகை முத்துப் புலவரிடம் தமிழ் பயின்று பெரும் புலவரான உமறுப்புலவர் எட்டயபுர அரசவைக் கவிஞர் ஆனார். 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் சீதக்காதி நொண்டி நாடகமும், முதுமொழி மாலை ஆகிய வேறு நூல்களையும் இயற்றியுள்ளார்.

5. வடவரை பொருவென மலிந்த மேனிலை – விளக்குக.

மதீனா நகரில் வாழும் மக்கள் செல்வவளம் கொண்டவர் ஆவர். அதனால் அவர்கள் தங்கள் இருப்பிடங்களை மாளிகைகளாய் அமைத்திருந்தனர். அம்மாளிகைகள் பல மாடங்களைக் கொண்டு மிகவும் உயர்ந்து விளங்கின. அவ்வாறு உயர்ந்து நிற்கும் மாளிகைகளைச் சிறப்பிக்கும் வகையில் மேரு மலைக்கு ஒப்பாய் உயர்ந்து விளங்கின.

6. எங்கு, எதனை [illegible] கடல் என ஒலித்த?

மதீன நகர் கடைவீதிகளில் விற்பவரும் வாங்குவோருமாய் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டிருந்தனர். அங்கு ஒரே நேரத்தில் கொள்வோரும் கொடுப்போரும் எழுப்பிடும் ஒலி; அலை எழுப்பும் பேரொலி போல் உள்ளது.

7. உமறுப்புலவர் "வீதிகள் புடவியை அளந்தன" என்கிறார் – எப்படி?

மதீனா நகரத்தில் உள்ள வீதிகள் வளைவு நெளிவின்றி ஒரே சீராய் அமைந்துள்ளன. அந்த வீதிகள் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை பார்த்தால், அத்தெருக்கள் பூமியை அளப்பது போலத் தோற்றமளிக்கின்றன. என்பதை உமறுப்புலவர் "வீதிகள் புடவியை அளந்தன" என்கிறார்.

8. 'மதீனம்' என்னும் சொல்லின் பொருளினை விளக்குக.

உலகிலுள்ள பழமையான நகரங்களில் ஒன்று மதீனம். அதனால் இது 'தொன்னகர்' எனப்பட்டது. இதன் இயற்பெயர் 'யத்ரிப்' என்பதாகும். நபிகள் நாயகம் வாழ்ந்ததும், பின் அடக்கமானதும் மதீன நகரில்தான்; அதனால் 'நபிகளது நகரம்' என்னும் பொருளில் 'மதீனம்' என வழங்கப்படுகிறது. மதீனம் என்பது 'மதீனத்துன்னபி' என்னும் அரபு சொற்றொடரின் சுருக்கம் ஆகும்.

9. இஸ்லாமிய சன்மார்க்கத்தின் உயரிய பண்புகளாக உமறுப்புலவர் குறிப்பிடுவன எவை?

தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம், வீரம், ஊக்கம் ஆகியன இஸ்லாமிய சன்மார்க்கத்தின் உயரிய பண்புகள் என உமறுப்புலவர் குறிப்பிடுகிறார்.

10. மதீன நகர மக்கள் விருந்தினரை எவ்வாறு உபசரித்தனர்?

மதீன நகர மக்கள், பணிவுடன் நன்மொழி கூறி வரவேற்று, இன்முகத்தோடு அறுசுவை உணவளித்து விருந்தினரை உபசரித்தனர்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

11. மதீன நகர் மதுஅருந்தியவன் போல இருந்தது எனக் கூறக் காரணம் யாது?

மதீன நகரத்துத் தெருக்களில், பல்வகைப் பொருள்கள் குவிக்கப்பட்டுத் தலைதெரியாது மயங்கிக் கிடக்கின்றன. அவ்வாறு குவிந்த பொருள்கள் தலைதெரியாது மயங்கிக் கிடப்பது மதுவை மிகுதியாய்க் குடித்தவன் நிலை புரண்டு காணப்பட்டது போல மதீன நகர் இருந்தது என உமறுப்புலவர் கூறுகிறார்.

12. 'மண்டிய வளம் தலைமயங்கலால்' என்னும் சீறாப்புராண அடி நினைவூட்டும் சங்கப் பாடலடியைக் குறிப்பிடுக:

மதீன நகரத் தெருக்களில் விற்பனைக்காகப் பல்வகைப் பொருள்கள் குவிக்கப்பட்டுத் தலைதெரியாது மயங்கிக் கிடக்கின்றன என்பதை உமறுப்புலவர் 'மண்டிய வளந்தலை மயங்கலான்' என்றார். இது பட்டினப்பாலை என்னும் நூல், காவிரிப்பூம்பட்டினத் தெருக்களில் பல்நாடுகளிலிருந்தும் வந்த பொருள்கள் தலைதெரியாது மயங்கிக் கிடந்தன என்பதை, 'வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்' எனக் குறிப்பிடுவது நினைவில் எழுகிறது.

13. மதீன நகருக்குப் பற்பல மொழி பேசுவோரும் வந்திருந்தனர் என்பதை எவ்வாறு அறிய இயல்கிறது?

பல நாட்டிலிருந்து வணிகர்கள் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்காக மதீனாவிற்கு வந்துள்ளனர். அவர்கள் தத்தம் தாய்மொழிகளிலே பேசுவதால் மாறுபட்ட பல ஒலிகள் எழுகின்றன. இதனை 'விண்டு பற்பல பலமொழி விளம்பலான்' என உமறுப்புலவர் கூறுவதிலிருந்து அறியலாம்.

14. மதீன நகரை உமறுப்புலவர் தம் பாடல்களில் எவ்வாறெல்லாம் சிறப்பித்துக் கூறுகிறார்?

மதீன நகரை உமறுப்புலவர் தம் பாடல்களில் தொன்னகர், பொன்னகர், மாநகர், நன்னகர், மேனகர் எனச் சிறப்பித்துக் குறிப்பிடுகிறார்.

15. ஹிஜ்ரத் காண்டம் என்னும் தொடரின் பொருள் யாது?

ஹிஜ்ரத் என்னும் அரபுச் சொல்லுக்கு 'இடம் பெயர்தல்' என்பது பொருள், மக்கா நகரக் குறைசி இன மக்கள் நபிகள் நாயகத்திற்குப் பல கொடுமைகள் செய்தனர். எனவே, அவர் தம் தோழர்களோடு மதீன நகருக்கு இடம் பெயர்ந்தார். அதனைப் பற்றிக் கூறும் பகுதி 'ஹிஜ்ரத் காண்டம்' எனப்பட்டது.

## ஒருமதிப்பெண் வினாக்கள்

1. நபிகளின் வாழ்க்கை என்பது அரபு மொழியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   சீறத்துன்னபி
2. 'விலாதத்' என்ற அரபுச் சொல்லிற்கான தமிழ்ச் சொல் என்ன?
   பிறப்பு
3. விலாதத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்களும் பாடல்களும் எத்தனை?
   24 படலம், 1240 பாடல்கள்
4. நுபுவ்வத் என்ற அரபுச் சொல்லிற்கான தமிழ்ச்சொல் என்ன?
   தீர்க்கதரிசி
5. நுபுவ்வத் காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்களும் பாடல்களும் எத்தனை?
   21 படலம் 1104 பாடல்கள்
6. ஹிஜ்ரத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள படலங்களும் பாடல்களும் எத்தனை?
   47 படலம் 2683 விருத்தப்பாக்கள்
7. ஹிஜ்ரத் என்ற அரபுச் சொல்லுக்கான தமிழ்ச் சொல் என்ன?
   இடம் பெயர்தல்
8. சீறாப்புராணம் நபிகள் நாயகத்தின் எத்தனையாவது வயது நிகழ்வுகளுடன் முடிவடைகிறது?
   57 வயது
9. முகமது நபி எத்தனை வயது வரை மக்காவில் இருந்தார்?
   52 வயது
10. மக்காவில் முகமது நபிக்குக் கொடுமைகள் செய்தது எந்த இன மக்கள்?
    குறைசி இனமக்கள்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net

சீறாப்புராணம்.

www.TrbTnpsc.com

ஒரு மதிப்பெண்

11. உமறுப்புலவரின் தந்தை பெயர் என்ன?

முகம்மது நயினார் பிள்ளை

12. உமறுப்புலவரின் பிறப்பு மற்றும் இறப்பு பற்றி எழுதுக.

பிறப்பு : 25.10.1642

இறப்பு ; 28.07.1703

13. வள்ளல் சீதக்காதியின் இயற்பெயர் என்ன?

செய்கு அப்துல்காதிர் மரைக்காயர்

14. சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர் யார்?

செய்கு கதஜகத்துல்லா அப்பா

15. சீறாப்புராணத்தின் முதற்பதிப்பு வெளிவந்த ஆண்டு?

கி.பி 1842

16. உமறுப்புலவரை ஆதரித்தவர் யாவர்?

வள்ளல் சீதக்காதி, அப்துல் காசிம் மரைக் காயர்.

www.Padasalai.Net

17. சின்னச் சீறாவைப் பாடியவர் யார்?

பனு அகமது மரைக்காயர்

18. உமறுப்புலவர் இயற்றிய வேறொரு நூல் யாது?

முதுமொழி மாலை

பலவுள் தெரிக.

19. உறுபகை, இன்சொல் ஆகிய சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு

அ) உரிச்சொற்றொடர், ஈற்றுப் போலி
ஆ) வினைத்தொகை இடவாகு பெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை
ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

20. மூத்த, பெரும்புகழ் ஆகிய சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு

அ) பெயரெச்சம், வினையெச்சம்
ஆ) பெயரெச்சம், வினைத்தொகை.
இ) பெயரெச்சம், பண்புப்பெயர்
ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

Scanned by CamScanner

www.Padasalai.Net    www.TrbTnpsc.com

21. மலைவிளாது, கிளைவலர் ஆகிய சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு

அ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை, தொகுத்தல் விகாரம்
ஆ) இடைக்குறை, தொகுத்தல் விகாரம்
இ) தொகுத்தல் விகாரம், ஐந்தாம் வேற்றுமைத் தொகை
ஈ.) தொகுத்தல் விகாரம், இடைக்குறை

22. நிறுத்தியோர், சுதைஒளி ஆகிய சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு

அ) வினைத் தொகை, பண்புத் தொகை
ஆ) வினையாலணையும் பெயர், வினைத்தொகை
இ) வினையாலணையும் பெயர், ஆறாம் வேற்றுமைத் தொகை
ஈ.) வினைமுற்று, வினைத்தொகை.

23. புடவி என்பதன் பொருள்

அ) கடல்    ஆ) மலை    இ) ஆறு    ஈ.) பூமி

24. 'மலைவிளா தருளிய வள்ளியோர்' - இவ்வடியில் வள்ளியோர் எனப்படுபவர்

அ) புலவர்    ஆ) மன்னன்    இ) வள்ளல்கள்    ஈ) இறைவர்

25. 'வாரண மதமலை' - இவ்வடியில் 'வாரண' என்பது

அ) அழகு    ஆ) மதம்    இ) யானை    ஈ) குரங்கு

26. 'வதுவையின் மணமென இருந்த' - இவ்வடியில் வதுவை என்பது

அ) திருமணம்    ஆ) விருந்து    இ) தினம்தினம்
ஈ.) சடங்கு

27. 'வானமில் உலக்கமும் ஒளிர்க்கொள் காய்த்த நல்' - இவ்வடியில் 'காய்த்த' என்பது

அ) புகழுடைய    ஆ) ஒழுக்கமுடைய
இ) சிறந்த    ஈ.) பிறந்த

28. 'கடலென ஒலித்தது அணத்தின கம்பலை' - இவ்வடியில் '~~[illegible]~~ கம்பலை' என்பது

அ) பேரொளி    ஆ) பேரொலி
இ) அழுகை    ஈ) யானைநிலம்

29. சரியானதைத் தேர்ந்தெடுக்க

அ) வரை - ~~[illegible]~~ இறுதி
ஆ) வதுவை - திருமணம்
இ) வாரணம் - ~~[illegible]~~ வண்ணம்
ஈ.) புடவி - கடல்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

30. பொருந்தாததைத் தேர்க

அ) சீறாப்புராணம் என்பது நபிநாயகத்தின் வாழ்க்கை வரலாறாகும்.
ஆ) 'சீறத்' என்பதே 'சீறா' என்றானது.
இ) சீறாப்புராணம் முழுவதும் உமறுப்புலவர் பாடினார்
ஈ) சீதக்காதி வள்ளல் ஆவார்.

31. பொருந்தாததைத் தேர்க

அ) விலாதத்துக் காண்டம் 24 படலத்தை உடையது.
ஆ) நுபுவ்வத்துக் காண்டம் 21 படலத்தை உடையது
இ) ஹிஜிறத்துக் காண்டம் 46 படலத்தை உடையது.
ஈ. சீறாப்புராணம் மொத்தம் 92 படலங்களை உடையது.

32. பொருந்திய விடைத் தேர்க

1. பெரும்புகழ் - வினையெச்சம்
2. சிந்தி - உரிச்சொற்றொடர்
3. மலிந்த - பண்புத்தொகை
4. மாநகர் - பெயரெச்சம்

அ) 4 2 1 3 ஆ) 2 4 1 3
இ) 3 2 4 1 ஈ) 2 1 4 3

33. பொருந்திய விடைத் தேர்க

1. வரை - நிறைந்த
2. பொறிகள் - மார்க்கம்
3. மண்டிய - மலை
4. தீன் - அம்புகள்

அ) 3 4 2 1 ஆ) 3 1 2 4
இ) 3 4 1 2 ஈ) 2 1 3 4

34. சரியானதைத் தேர்க

அ) மதீனா ஒரு பகை நகரம்
ஆ) மதீனா ஒரு நோய் நகரம்
இ) மதீனா ஒரு வறுமை நகரம்
ஈ) மதீனா ஒரு மாளிகை நகரம்

35. சரியானதைத் தேர்க

அ) மக்கா நகரில் வாழ்ந்த மக்கள் செல்வமிகு இனத்தினர்
ஆ) மக்கா நகரில் நபிகள் மகிழ்ச்சியாய் வாழ்ந்தார்
இ) மதீனா நகரில் 'தீன்' தழைத்தது.
ஈ) மதீனா நகரில் வறுமை நிலவியது.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner